JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563/2024 |
| | : | Prosecution P.W - 62 |
| NAME | : | ராமநாடான் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 16.04.2026

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சமையல் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எங்கள் உறவினர்கள். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் என்பவரை தெரியாது அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியாது அசா.4 செல்வராஜ் தெரியாது. அசா.5 ஜோசப்ராஜ் என்பவரை தெரியும். அசா.6 அருமைகிளியை தெரியாது அசா.7 பாலமுருகன் தெரியாது. அசா,8 செல்வராணி என்பவரை தெரியாது. அசா.9 பூங்கொடி சூசை தெரியாது . அசா.10 சீதாலெட்சுமி தெரியாது. அசா.11 ராமலெட்சுமி தெரியாது. அசா.12 பொன்பாண்டியை தெரியாது. அசா.13 சாந்தியை தெரியும் அசா.14 குணசீலன் தெரியாது. அசா.15 முத்துலெட்சுமி தெரியாது. அசா.16 செல்வகுமாரி தெரியாது அசா.17 முருகன் தெரியாது. அசா.18 ராமர் மனைவி சரோஜா தெரியாது, அசா.19 குமரேசன் தெரியாது. அசா.20 மணிராஜ் தெரியாது. அசா.21 பொன் சேகர் தெரியாது. அசா.22 சுதா

தெரியாது. அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியாது அசா.25 ஜானகி தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியாது. அசா.27 தெய்வகனியை தெரியாது. அசா.28 செல்வன் தெரியாது. அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது. அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியாது அசா.31 அன்னபூரணியை தெரியாது. அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியாது அசா.33 முத்துக்கனியை தெரியாது. அசா.34 வசுமதி தெரியாது. அசா.35 இருளப்பன் தெரியாது. அசா.36 முருகன் தெரியாது அசா.37 கெலன் ஞானபிரகாசம் தெரியாது அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி தெரியாது. அசா.40 புஷ்பவள்ளி தெரியாது. அசா.41 விஜய் தெரியாது. அசா.42 சரோஜா தெரியாது அசா.43 பாலமுருகன் தெரியாது அசா.44 காளீஸ்வரி தெரியாது. அசா.45 கனகமணி தெரியாது அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது. அ.சா.49 மூக்கம்மாள் தெரியாது அசா.50 முருகன் தெரியாது அசா.51 ஐயப்பன் தெரியாது அசா.52 கவிதா தெரியாது. அசா.53 யோகேஸ்வரி தெரியாது. அசா.54 குமார் தெரியாது. அசா.55 சரஸ்வதி பாப்பா என்பவரை தெரியாது. அசா.56 திருமலை என்பவரை தெரியாது. அசா.57 மரிய அருள்ராஜன் என்பவரை தெரியாது. அசா.58 அற்புத ஜெகன் பிரகாஷ் தெரியும். அசா.60 பலவேச நாடார் மகன் ஜெயக்குமார் என்பவரை தெரியாது, அசா.61 பொதிகை அலெக்ஸ் என்பவரை தெரியும்.

இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் மகள் திருமணத்திற்காக கடந்த 9 வருடத்திற்கு முன்பு மாயவன் கோவிலில் நான் சீட்டு போட்டிருந்தேன். சீட்டை யார் பிரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் ரூ.60,000 சீட்டில் ஒரு சீட்டு போட்டிருந்தேன். என் மனைவி சீட்டு பணத்தை கட்டுவார். என் மகள் திருமணத்திற்காக நான் போட்ட சீட்டு பணத்தை எடுத்து கொண்டேன்.இந்த வழக்கு சம்பவம் பற்றி வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

கடந்த 2010ம் வருடம் முதல்மாயவன் கோவிலில் ஆஜர் எதிரிகள் சீட்டு பிரித்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையின் போது கடந்த 2010ம் வருடத்தில் ஆஜர் எதிரிகள் 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள் என்றால் சரியல்ல. கடந்த 22.10.2019 ம் தேதியன்று காலை 7.00மணியளவில் வெய்க்காலிபட்டி மாயவன் கோவிலின் முன்பு அசா.1 தன்னுடைய சீட்டு பணத்தை கேட்ட போது ஆஜர் எதிரிகள் அவரை பொது இடத்தில் வைத்து அசிங்கமாக

பேசினார்கள் என்றால் சரியல்ல, ஆஜர் எதிரிகள் எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் நம்பிக்கை வார்த்தைகள் கூறி மோசடி செய்யும் நோக்கத்தில் இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சிகளிடமிருந்து ரூ.45,22,050 பணத்தினை பெற்றுக் கொண்டு நம்பிக்கை மோசடி செய்தார்கள் என்றால் சரியல்ல, இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சிகளுக்கு மன உளைச்சலையும், அவமானத்தையும், உயிர் பயத்தையும் ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. மேலும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று ஸ்டேம்ப் ஒட்டிய பேப்பர்களையும், புரோ நோட்டுகளையும், ஏல சீட்டு நடத்திய வரவு செலவு நோட்டுகளையும் மறைக்கும் எண்ணத்தில் எறித்து அழித்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க அசா.1 காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி விசயம் உண்மை என்றாலும் தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்து கொண்டு இவ்வழக்கிலிருந்து விடுவிக்க உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//563/2024 |
| | : | Prosecution P.W - 61 |
| NAME | : | பொதிகை அலெக்ஸ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 16.04.2026

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். என் உறவினர்கள். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் என்பவரை தெரியும். அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியும். அசா.4 செல்வராஜ் தெரியாது. அசா.5 ஜோசப்ராஜ் என்பவரை தெரியும். அசா.6 அருமைகிளியை தெரியாது அசா.7 பாலமுருகன் தெரியாது. அசா,8 செல்வராணி என்பவரை தெரியாது. அசா.9 பூங்கொடி சூசை தெரியும். அசா.10 சீதாலெட்சுமி தெரியாது. அசா.11 ராமலெட்சுமி தெரியாது. அசா.12 பொன்பாண்டியை தெரியாது. அசா.13 சாந்தியை தெரியும் அசா.14 குணசீலன் தெரியாது. அசா.15 முத்துலெட்சுமி தெரியாது. அசா.16 செல்வகுமாரி தெரியும் அசா.17 முருகன் தெரியாது. அசா.18 ராமர் மனைவி சரோஜா தெரியாது, அசா.19 குமரேசன் தெரியும். அசா.20 மணிராஜ் தெரியாது. அசா.21 பொன் சேகர் தெரியாது. அசா.22 சுதா

தெரியாது. அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியும். அசா.25 ஜானகி தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியாது. அசா.27 தெய்வகனியை தெரியாது. அசா.28 செல்வன் தெரியும். அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது. அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியும். அசா.31 அன்னபூரணியை தெரியாது. அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் தெரியும். அசா.33 முத்துக்கனியை தெரியாது. அசா.34 வசுமதி தெரியாது. அசா.35 இருளப்பன் தெரியாது. அசா.36 முருகன் தெரியாது அசா.37 கெலன் ஞானபிரகாசம் தெரியும் அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி தெரியாது. அசா.40 புஷ்பவள்ளி தெரியாது. அசா.41 விஜய் தெரியாது. அசா.42 சரோஜா தெரியாது அசா.43 பாலமுருகன் தெரியும். அசா.44 காளீஸ்வரி தெரியாது. அசா.45 கனகமணி தெரியும் அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது. அ.சா.49 மூக்கம்மாள் தெரியும் அசா.50 முருகன் தெரியாது அசா.51 ஐயப்பன் தெரியும் அசா.52 கவிதா தெரியாது. அசா.53 யோகேஸ்வரி தெரியாது. அசா.54 குமார் தெரியாது. அசா.55 சரஸ்வதி பாப்பா என்பவரை தெரியாது. அசா.56 திருமலை என்பவரை தெரியாது. அசா.57 மரிய அருள்ராஜன் என்பவரை தெரியாது. அசா.58 அற்புத ஜெகன் பிரகாஷ் தெரியும். அசா.60 பலவேச நாடார் மகன் ஜெயக்குமார் என்பவரை தெரியாது

கடந்த 10,12 வருடங்களுக்கு முன்பு மாயவன் கோவிலில் நான் சீட்டு போட்டிருந்தேன். சீட்டை ஆஜர் எதிரிகள் பிரித்தார்கள். 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.61,000 சீட்டில் 4 சீட்டுக்கள் போட்டிருந்தேன். நான் சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணிமுதல் 8.00 மணிக்கு சீட்டு பணத்தை கொடுக்கும் போது வாங்கி நோட்டில் டிக் செய்துவிடுவார்கள். கடைசியில் 8 சீட்டு இருக்கும் போது சீட்டு பிரிக்கவில்லை. தோராயமாக ரூ.57000 பணம் கட்டி இருப்பேன். பின்னர் சீட்டு பிரிக்கவே இல்லை. அதன் பின்னர் விசாரித்த போது அவர்கள் காணாமல் போய் விட்டதாக சொன்னார்கள். இரண்டு வருடங்கள் கழித்து திரும்ப வந்தார்கள். அதில் பாதியாக ரூ.31,000 கணக்கு செய்து திரும்ப கொடுத்தார்கள். மீத பணத்தை தருகிறேன் என்று சொன்னார்கள். தற்போது வரை தரவில்லை. என் வீட்டு அருகில் கோயில் இருப்பதாலும் அவர்கள் என் உறவினர்கள் என்பதாலும் நான் சீட்டு போட்டிருந்தேன். நடவடிக்கை எடுக்க கிருஷ்ணன் என்பவர் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கிருஷ்ணன் தகப்பனார் பெயர் தெரியாது. பூங்கொடி சூசையின் அப்பா பெயர் தெரியாது. பூங்கொடி சூசையின் கணவர் பெயர்

தெரியுமா என்றால் பூங்கொடி சூசை என்பது ஒரு தாத்தா. என்னை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் கோவில் முன்பு சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். அதன் பிறகு புகார் கொடுத்த பின்பு போலிசார் கேட்டார்கள். புகார் எந்த தேதியில் கொடுத்தார்கள் என்று தெரியாது. அந்த புகாரில் யாரெல்லாம் கையெழுத்து செய்தார்கள் என்ற விவரம் தெரியாது. புகாரில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்று தெரியாது. புகாரை கிருஷ்ணன் கொடுத்தாக சொன்னார்கள். எனது பெரியப்பா அந்தோணி ராஜ், எங்கள் மாமா டேவிட் அமல்ராஜ் ஆகியோர்கள் கேஸ் போட்டிருப்பதாகவும் அதற்கு சாட்சி சொல்ல வரவேண்டும் என்றும் சொன்னார்கள். நான் சரியென்று சொன்னேன். 1வது எதிரிக்கு எங்கள் ஊர்தான். அவர் திருமலையப்பபுரத்தில் உள்ள ஒரு பள்ளியில் வாத்தியார். என் வீடும், 1ம் எதிரி வீடும் 4 வீடு தள்ளி உள்ளது. இரண்டு வருடம் தலைமறைவாக இருந்த விவரம் எனக்கு ஊர்க்காரர்கள் சொல்லி தெரியும். என்னை ஆய்வாளர்கள் விசாரித்து வாக்குமூலம் வாங்கும்போது ரூ.61,000 சீட்டிற்கு கட்டியதாக தான் நான் சொன்னேன் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு ரூபாய் செலுத்தினேன் என்ற விவரத்தை காவல்ஆய்வாளர் விசாரிக்கும் போது சொன்னேன் என்றால் சொல்லவில்லை. இந்த சீட்டு பணம் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்று ஞாபகம் இல்லை. நான் செலுத்தியதாக சொல்லும் சீட்டுப்பணம் எந்த வருடம் நிறைவடையும் என்றால் ஞாபகம் இல்லை. நான் எத்தனாவது சீட்டு பணம் எடுத்தேன் என்றால் முதலில் ஒரு சீட்டு எடுத்து விட்டேன், மூன்று சீட்டுகள் எடுக்கவில்லை.

முதலில் எடுத்த சீட்டு எத்தனையாவது சீட்டு என்றால் ஞாபகம் இல்லை. எவ்வுளவு பணம் எடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. அந்த சீட்டு பணம் முழுவதையும் செலுத்தி முடித்து விட்டேனா என்றால் இல்லை, 8 சீட்டுக்கள் செலுத்த வேண்டி உள்ளது. நான் எடுத்த சீட்டில் மொத்தம் எத்தனை புள்ளிகள் என்று தெரியாது. நான் அடிக்கடி டிரைவர் வேலைக்கு வெளியூர் சென்று விடுவதால் ஒவ்வொரு வாரமும் குறிப்பிட்ட தொகையை என்னால் முறையாக செலுத்த முடியாது என்றால் எப்போதாவது ஒருமுறை செலுத்த முடியாமல் போகும். நான் கோவில் வரிதாரர் கிடையாது. அந்த கோவிலில் நிர்வாகம் யார் செய்கிறார் என்ற விவரம் தெரியாது. எத்தனை வாரங்கள் சீட்டு பணம் செலுத்தி உள்ளேன் என குறிப்பிட்டு சொல்ல இயலாது. ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு பணம் செலுத்தி உள்ளேன் என்ற விவரம் தெரியாததால் எவ்வுளவு பணம் செலுத்தி உள்ளேன் என என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் செலுத்திய தொகை 8 சீட்டுகளை கழித்து தோராயமாக சொன்னேன். ரூ.61000 சீட்டில் முதல் சீட்டில் ரூ.500 முழுவதுமாக செலுத்தினேன்,

அடுத்து தொடர்ந்து வரும் சீட்டுக்கள் கழிவு கழித்து எவ்வுளவு செலுத்தினேன் என ஞாபகம் இல்லை. எத்தனை வருடங்களாக இந்த கோவிலில் சீட்டு பணம் நடத்தபட்டு வருகிறது என்றால் ஞாபகம் இல்லை.

முதல் மாச சீட்டு பணம் ரூ.500 யாருக்கு என்றால் ஏலம் விடுவார்கள். ஏலம் விழுந்தவர்களுக்கு அந்த பணத்தை கொடுப்பார்கள். என்னை போலிசார் விசாரிக்கும் போது நான் ஏல பணத்தை எடுத்து விட்டேன், முழு சீட்டையும் நான் கட்டி முடித்து விட்டேன் என சொன்னேனா என்றால் இல்லை. இந்த கோவிலில் நிர்வாகம் செய்தவர்கள் இந்த கோவிலின் நன்மைக்காக சீட்டு நடத்தினார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் இந்த எதிரிகள் ஒரு போதும் சீட்டு பணம் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் நான் சீட்டு பணத்தில் புள்ளியாக இருந்து சீட்டு பணம் செலுத்தியது கிடையாது என்றாலும் சரியல்ல. ரூ.31,000 திரும்ப தந்ததாக போலிசிடம் சொன்னேனா என்றால்இல்லை அதன் பிறகு தான் தந்தார்கள். ரூ.31,000 எப்போது தந்தார்கள் என்றால் ஞாபகம்இல்லை, யார் தந்தார் என்றால் துரை என்பவர் தந்தார். நான் சொல்வது போல் ரூ.31,000 கொடுத்திருப்பது கிடையாது என்றாலும் இந்த எதிரிகள் ஒருபோதும் சீட்டு பணம் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. எதிரகள் 2 வருடங்கள் காணாமல் போனதாக சொல்லி உள்ளது பொய் என்றால் சரியல்ல, போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க எதிரிகள் சீட்டு நடத்தியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் தான் போலிஸ் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் போலிசார் சீட்டு போட்டேனா என கேட்டார்கள். சீட்டு போட்டதாக சொன்னேன். சாட்சியாக சேர்த்து கொள்ளவா எனக் கேட்டார்கள் சரி என சொன்னேன். ரூ.61,000 சீட்டில் எத்தனை வாரங்கள் கட்ட வேண்டும் என்றால் 123 வாரங்கள் செலுத்த வேண்டும். நான் 8 வாரங்கள் கட்ட வேண்டும். மற்றவை கட்டி விட்டேன். என்னுடன் சீட்டு போட்ட மற்றவர்கள் நான் எத்தனை வாரம் செலுத்தி உள்ளேனோ அதே வாரங்கள் செலுத்தி உள்ளார்கள் என்றால் சரிதான். இரண்டாவது சீட்டு மாயவன் கோவிலுக்கு என்றால் சரிதான். கோவிலிலிருந்து சீட்டு நடத்தியதால் கோவிலுக்கு அந்த பணத்தை எடுத்து கொள்வார்கள் என்றால் சரிதான். சீட்டு பணத்தை ஏலம் எடுத்தவர்களும் கட்டவில்லை என்றால் சரிதான். ஏலக்கழிவு தொகை கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். ஏலம் கேட்கும் நபர்களுக்கு உடனடியாக பணம் கொடுத்து விடுவார்கள் என்றால்கொடுத்து

விடுவார்கள். முடியவில்லை என்றால் மறுநாள் காலையில் கொடுத்து விடுவார்கள். ஏலசீட்டு சம்பந்தமாக புகார் கொடுக்கும் போது நான் காவல்நிலையம் செல்லவில்லை.

நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னதுபோல் இந்த வழக்கிற்கும், இந்த எதிரிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும், நான் எந்த சீட்டு பணமும் கொடுக்கவில்லை என்றாலும், ஆஜர் எதிரி அதை வரவு வைக்கவில்லை என்றாலும் எதிரியோ, அவருக்கு வேண்டப்பட்டவர் யாருமோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல.

(1 வது எதிரியின் குறுக்கு விசாரணை இரண்டாவது எதிரியின் சார்பாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. )

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi